உரைநடை உலகம்

இயற்கை

உ

# கேட்கிறதா என் குரல்!

NFR8Y

நுழையும்முன்

உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை! நாம் நம்பியிருப்பதும் நம்மில் இருப்பதும் இயற்கையே. மூச்சுக்குக் காற்று, தாகத்திற்கு நீர், உறைவதற்கு நிலம், ஒளிக்குக் கதிரவன் போன்றவை உயிரினங்களின் முதன்மைத் தேவை. இயற்கையின் கூறுகளில் காற்றின் பங்கு கூடுதலானது; காற்றே எங்கும் நிறைந்திருக்கிறது; மெல்லத் தொட்டுச் சென்றால் தென்றல்; தூக்கிச் சென்றால் புயல்! உயிரை உள்ளிருத்தும் காற்று, ஓர் உருவம் கொண்டு நம்மிடம் பேசினால்...



மனிதா! மனிதா! அழைப்பது கேட்கிறதா? எங்குப் பார்க்கிறாய்? யாரைத் தேடுகிறாய்? உன் மூச்சை உள்ளே இழு, வெளியே விடு. உன் மூச்சின் உள் சென்று வெளிவரும் நான்தான் பேசுகிறேன். வாழும் உயிர்களின் உயிர்மூச்சு நான். என்னைக் கண்களால் காணமுடியாது; மெய்யால் உணரமுடியும். என்னால் மழை; என்னால் பருவமாற்றம்; என்னால் இசை; என்னாலும் இலக்கியம்; இன்னும் என்னை யாரென்று தெரியவில்லையா? நான்தான் காற்று.

தொல்காப்பியர், உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார். அவற்றுள் என்னையும் ஒன்றாய்ச் சேர்த்தது எனக்குப் பெருமையே!

### உயிராக நான்

உங்களின் இயக்கத்தையும் உலக உயிர்களின் இயக்கத்தையும் தீர்மானிப்பது என் இயக்கம்தானே! அதனால்தான் திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப்பயிற்சியே உடலைப்



10th_Tamil_Unit 2.indd 26 2/14/2023 6:40:51 PM